**செய்தி வெளியீடு எண்: 606** **நாள் : 28.11.2014**

**செய்தி வெளியீடு**

**இந்து சமய அறநிலையத்துறை ஆய்வுக் கூட்டம்**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு பூ.செந்தூர்பாண்டியன் அவர்கள் தலைமையில் இந்து சமய அறநிலையத்துறை மாவட்ட உதவி ஆணையர்கள், மண்டல இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் நிலையில் பணிபுரியும் செயல் அலுவலர்கள், பொறியாளர்கள் ஆகியோரது பணிகள் குறித்த சீராய்வுக் கூட்டம் இன்று (28.11.2014) வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது.

இவ் ஆய்வுக் கூட்டத்தில் பேசிய மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு பூ.செந்தூர்பாண்டியன் அவர்கள் திருக்கோயில்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருப்பதோடு திருக்கோயில்களுக்கு இறையருள் வேண்டி வருகை தரும் பக்தர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் அதாவது அடிப்படை வசதிகள் உள்ளிட்ட எளிய முறையில் தரிசனம் செய்வதற்கு உதவிடும் வகையில் அனைத்து வசதிகளையும் செய்தளிக்க அனைத்து அலுவலர்களும் முனைப்புடன் செயல்பட வேண்டும் எனவும், திருக்கோயில்களுக்கு பெறப்பட வேண்டிய வருமானங்களை பெறுவதில் மேலும் ஆர்வம் செலுத்த வேண்டுமெனவும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கடைகள், மனைகள் ஆகியவற்றை வணிக நோக்கத்திலும், குடியிருப்புக்காகவும் அனுபவித்து வரும் வாடகைதாரர்களை அவ்வப்போது செயல் அலுவலர் உட்பட அனைத்து வெளித்துறை பணியாளர்களும் நேரில் சென்று அணுகி வாடகை வசூலிப்பதை வழக்கப்படுத்த வேண்டும். இது போன்று நஞ்சை, புஞ்சை குத்தகைதாரர்களிடம் மனித நேயத்துடன் அணுகி வாடகை பாக்கிகளை வசூலிக்க வேண்டும் எனவும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டுமெனவும் எந்தவகையிலும் ஆக்கிரமிப்புக்கு இடம் அளிக்கக் கூடாது எனவும் அறிவுறுத்தினார்.

மேலும் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் கடந்த ஆண்டுகளில் சட்டப்பேரவை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை செயல்படுத்துவதில் மிகுந்த அக்கறையும் வேகமும் வேண்டுமெனவும், இந்நிதியாண்டுக்குள் அந்த அறிவிப்புகளை முழுமையாக நிறைவு செய்து காட்ட வேண்டுமெனவும் தெரிவித்ததோடு மேலும் சட்டசபையில் தன்னால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளையும் விரைவுபடுத்தவும் தெரிவித்தார்.

திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்வது ஒரு வாலாய பணியாக அமைய வேண்டும் எனவும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணி செய்து குடமுழுக்கு செய்ய வேண்டும் என்ற

ஆகம விதியை தவறாது பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். அத்துடன் பழமை வாய்ந்த திருக்கோயில்களை புனரமைப்பதற்கு கடந்த 3 ஆண்டுகளாக ஆண்டுதோறும் இருபத்திரண்டரை இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அவற்றிற்கான திருப்பணிகளை மேலும் விரைவுப்படுத்த வேண்டும். இத்திருப்பணிகள் மேற்கொள்ளும்போது திருக்கோயில்களின் பழமை மாறக்கூடாது. பழமையையும் பாரம்பரியத்தையும் பாதுகாப்பதில் நாம் அக்கறை செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

இது போன்று கிராமப்புறத்தில் அமைந்துள்ள சிறு சிறு திருக்கோயில்களையும் ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களையும் திருப்பணி செய்வதற்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூபாய் ஐம்பதாயிரம் வழங்கப்படுவதை முறையாக செலவிடப்பட வேண்டும் என்பதோடு அப்பகுதியில் உள்ள மக்களையும் இத்திருப்பணியில் ஒருங்கிணைத்து ஈடுபடுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களால் அறிவிக்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டம் இந்த ஆண்டு மிகவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது குறித்து மகிழ்ச்சி தெரிவித்ததோடு மேலும் விடுபட்ட கட்டடங்கள், திருக்குளங்கள், திருக்கோயில்கள் ஆகியவற்றில் இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற கேட்டுக்கொண்டார். மேலும் திருக்கோயில்கள் திருப்பணி மட்டுமின்றி திருக்குள திருப்பணி, திருத் தேர் திருப்பணி ஆகியவற்றிலும் அக்கறை செலுத்த வேண்டுமெனவும், திருப்பணிகளில் காட்டும் ஆர்வத்தைப் போன்று இவற்றிலும் ஆர்வம் செலுத்த வேண்டுமெனவும் திருக்கோயில் என்பது கோயில் பகுதி அமைந்துள்ள பகுதி மட்டுமல்லாது அத்துடன் இணைந்த திருக்குளம், திருத்தேர், வாகனங்கள் போன்ற அனைத்தும் அடங்கும் என்பதை கருத்தில் கொண்டு அவைகளை சீரமைத்து பாதுகாக்க அனைத்து அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

இத்துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் திருக்கோயில்களின் பணிகளை மேற்கொள்ளும் போது இது ஒரு இறைபணி என்பதைக் கருத்தில் கொண்டு மிகுந்த எச்சரிக்கையுடன் தங்களுக்கு இறைவனிடம் பணி செய்ய கிடைத்த வாய்ப்பு என்பதை பயன்படுத்தி பணிகளை நல்லமுறையில் விரைவாக செய்யவும் போதிய ஒத்துழைப்பை நல்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இது போன்று திருக்கோயில் கணக்குகளை தணிக்கை செய்யும் தணிக்கையாளர்கள் அந்தந்த ஆண்டு முடிவுற்றவுடன் ஒரிரு மாதங்களில் கணக்குகளை தணிக்கை செய்வதை வழக்கப்படுத்த வேண்டுமெனவும் இரண்டு ஆண்டுகள் மூன்று ஆண்டுகள் என காலம் தாழ்த்தி தணிக்கையை செய்வதால் தணிக்கையின் நோக்கம் தோல்வி அடையும் எனவும் சுட்டிக்காட்டி தணிக்கை செய்வதில் ஆர்வமுடனும், விரைவுடனும் தங்கள் பணியை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் முன்னிலை வகித்த சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் திரு இரா. கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் ஆய்வின் போது திருக்கோயில்களின் திருப்பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்து அவைகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் எந்தெந்த பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி பழமை மாறாது தொல்லியல் நடைமுறையின்படி திருப்பணி மேற்கொள்வதில் சமாதானத்திற்கு இடமில்லை என்பதை தெளிவுபடுத்தினார். மேலும் பழமையான திருக்கோயில்கள் திருப்பணிகளை மேற்கொள்ளும்போது அதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனையை பெறப்பட்ட பின்னர்தான மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டும் என வலியுறுத்தினார். உபயதாரர் திருப்பணிகளுக்கும் இந்த அறிவுரை பொருந்தும். சட்டப்பேரவை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் மேலும் கவனம் செலுத்த வேண்டுமென தெரிவித்தார். திருக்கோயில்களில் ஏற்றப்படும் கற்பூரம் இரசாயனப் பொருட்களில் செய்வதாக உள்ளதால் அதனை சுவாசிக்கும் அர்ச்சகர்கள் மற்றும் பக்தர்கள் ஆரோக்கியத்திற்கு கேடுவிளைவிப்பதாக உள்ளது. சுவரும் கரி பிடிப்பதால் நெய் விளக்கு ஏற்றப்பட வேண்டுமென தெரிவித்தார்.

இக்கூட்டத்தின் நிறைவில், கடந்த மூன்றரை ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத்துறையில் மேற்கொள்ளப்பட்ட பணி முன்னேற்றங்களையும், சாதனைகளையும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் விவரித்தார்.

தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான 3098 ஏக்கர் நிலங்களை கண்டறிந்து மீண்டும் திருக்கோயில் பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய ஆணை பெறப்பட்டது எனவும், கணினி சிட்டாவில் தனியார் பெயரில் இருந்த 544.16 ஏக்கர் நிலத்தை கண்டறிந்து திருக்கோயில் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது எனவும் ஆக்கிரமிப்பில் இருந்த நிலங்களில் 1650.99 ஏக்கர் நிலங்களும் 289 கிரவுண்டு 981 சதுர அடி மனைகளும் 83 கிரவுண்டு 0040 சதுர அடி பரப்பளவு உள்ள கட்டடங்களும் மீட்கப்பட்டு திருக்கோயில்களின் சுவாதீனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட அன்னதானத் திட்டம் 518 திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இவற்றில் பழநி மற்றும் ஸ்ரீரங்கத்தில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 206 திருக்கோயில்களுக்கு விரைவில் விரிவுபடுத்தப்பட உள்ளது.

ஒரு காலபூஜை திட்டத்தின் கீழ் ஒரு காலம் கூட பூஜை செய்ய நிதிவசதியில்லாத 11931 திருக்கோயில்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்காக அரசு மானியம் ஐம்பத்தொன்பது கோடியே நாற்பத்தி எட்டு இலட்சம் ரூபாயும் நிதி

வசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து முப்பது கோடி ரூபாயும் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களது மூன்றாண்டு ஆட்சிக் காலத்தில் **6369** திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது.

**183** தொன்மையான திருக்கோயில்களை பழமை மாறாது புதுப்பிக்க ஆண்டு ஒன்றுக்கு இருபத்திரண்டு கோடி ஐம்பது இலட்சம் ரூபாய் வீதம் அறுபத்தி ஏழு கோடி ஐம்பது இலட்சம் வழங்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான பழுதடைந்த **108** திருத்தேர்கள் சீரமைக்கப்பட்டு நின்று போன தேரோட்ட விழாக்கள் நடத்தப்பட்டன.

திருக்கோயில்களின் **601** திருக்குளங்கள் ஒருகோடி எழுபது இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு சீரமைக்கப்பட்டு மழை நீர் சேகரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்ட நிதியுதவி இருபத்தைந்தாயிரம் ரூபாயிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாயாக உயர்வு செய்யப்பட்டு **624** திருக்கோயில்களுக்கு மூன்று கோடி பன்னிரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. **2013–2014**ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள **1006** திருக்கோயில்களுக்கு ஐந்து கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

**256** கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணிகளுக்கு ஒரு கோடி இருபத்தி எட்டு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன. **2013–2014** ஆம் நிதியாண்டிற்கு **1006** கிராமப்புற திருக்கோயில்களுக்கு ஐந்து கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

**96** திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக வருடத்திற்கு மூன்று கோடி ரூபாய் வீதம் இரண்டு வருடங்களுக்கு ஆறு கோடி ரூபாய் அரசு மானியம் வழங்கப்பட்டது. **2013–2014**ஆம் ஆண்டிற்கு அரசு மானியம் ஆண்டுக்கு மூன்று கோடி ரூபாயிலிருந்து ஆறு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு **70** திருக்கோயில்களுக்கு நிதி வழங்கப்பட்டது. **595** திருக்கோயில்களுக்கு முப்பத்தொன்பது கோடி ரூபாய் பொது நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு புனரமைக்கப்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களது ஆட்சி பொறுப்பேற்றவுடன் துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியம் எண்ணூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு **3926** நபர்கள் பயனடைந்து வருகின்றனர். அதே போல் அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுபவர்கள் மற்றும் இசைக்

கலைஞர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு எழுநூற்றி ஐம்பது ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு 483 நபர்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கிராமப்புற பூசாரிகளுக்கான ஓய்வூதியம் எழுநூற்றி ஐம்பது ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு 2923 பூசாரிகள் பயன்பெறுகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் திருக்கோயில் பணியாளர்களுக்கு மனித நேயப் பயிற்சியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள் மற்றும் ஓதுவார்களுக்கு புத்தொளிப் பயிற்சியும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நிர்வாகச் செலவினத் தொகை ஒரு கோடி ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் இந்து சமயத்தைச் சேர்ந்த சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய 1006 இணைகளுக்கு எல்லாவித சீர்வரிசைகளுடன் 18.06.2012 அன்று திருவேற்காட்டில் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

மாவட்டந்தோறும் பாவை விழா நடத்தப்பட்டு 9999 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு 1812 மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. முக்கிய திருக்கோயில்களில் ஆன்மிக ஒழுக்க நெறி வகுப்புகள் நடத்தப்பட்டு 25920 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் அடைந்து வருகின்றனர்.

பணியில் இருக்கும் போது இறந்த பணியாளர்கள் 234 வாரிசுதாரர்களுக்கு இரண்டு கோடி இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. கருணை அடிப்படையில் திருக்கோயில் பணியாளர்களின் 78 வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டது. 2777 திருக்கோயில்களில் பணிபுரியும் 3488 பணியாளர்களுக்கு நூற்றி ஐம்பத்தி ஆறு இலட்சம் ரூபாய் சம்பள பாக்கி நிலுவை வழங்கப்பட்டது.

திருக்கோயில்களின் விலை மதிப்பற்ற புராதன உலோகத் திருமேனிகள் மற்றும் சிலைகளை பாதுகாக்க தற்போதுள்ள 19 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்களுடன் புதியதாக 15 மையங்கள் பதினான்கு கோடி பத்தொன்பது இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு மானசரோவர் மற்றும் முக்திநாத் திருத்தலங்களுக்குப் புனித பயணம் மேற்கொள்ளும் நபர்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மானசரோவர் பயணம் மேற்கொண்ட 146 நபர்களுக்கு தலா

நாற்பதாயிரம் ரூபாயும், முக்திநாத் புனிதப் பணம் மேற்கொண்ட 10 நபர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக மிகப் பிரமாண்டமாக நாற்பத்தி ஏழு கோடி எட்டு இலட்சம் ரூபாய் செலவில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆணையர் (விசாரணை), கூடுதல் ஆணையர் (திருப்பணி), கண்காணிப்புப் பொறியாளர், தலைமை தணிக்கை அலுவலர் மற்றும் இதர தலைமையிட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**